011922

செப் 1994

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - அண்ணாவின் அனைத்துப் படைப்புகள் - எழுத்து வடிவங்கள் அனைத்தையும் - நாட்டுடைமையாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டு (தவ1-1)த்துறை

அரசாணை (நிலை) எண்: 190

நாள்: 15.9.94
திருவள்ளுவராண்டு 2025,
ஆவணி 30, பவ.

ஆணை:

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழாவையொட்டி, அண்ணாவின் அனைத்துப் படைப்புகள் - எழுத்து வடிவங்கள் குறித்த பதிப்புரிமைகள் தனியாரிடம் மட்டும் அமைந்திருப்பதை இலக்கியப் பொது நலங் கருதி நாட்டு மக்களுக்கு உரிமையாக்கும் நன்னோக்குடன் அண்ணாவின் இலக்கியப் படைப்புகள் - எழுத்து வடிவங்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க அரசு முடிவு செய்து ஆணையிடுகிறது.

2. பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படுவதன் மூலம் நாட்டுடைமையாக்கப்படும் நாள் முதல் அவர் தம் படைப்புக்களின் பதிப்புரிமைகள் அனைத்தும் அரசையே சாரும். இதுகாறும், வெளிவராத அண்ணாவின் நூல்கள் ~~சுவடிகளைப் புதிதாக வெளியிட~~ முதனிலையில் அரசின் முன்னிசைவைப் பதிப்பாளர்கள் பெற வேண்டும்.

3. பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படுவதால் இதற்குண்டான பரிவுத் தொகை காலஞ்சென்ற அண்ணாவின் குடும்பத்திற்கு உரிய காலத்தில் வழங்கப்படும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. பா. இளங்கோவன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

திருமதி. இராணி அண்ணாதுரை,
காலஞ்சென்ற பேரறிஞர் அண்ணாவின் மனைவி,
7, அவின்யூசாலை, நுங்கம்பாக்கம், சென்னை-34.

தமிழ் வளர்ச்சி இயக்குநர், குறளகம், சென்னை-108.

சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை-79.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.

மாண்புமிகு நிதியமைச்சர் அலுவலகம், சென்னை-9.

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

மாண்புமிகு கல்வியமைச்சர் அலுவலகம், சென்னை-9.

நகல்:

நிதித் துறை, சென்னை-9.

செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை-9.
இ. கோ. / உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

16/9/94

பிரிவு அலுவலர்.

ASTY &

der the auspices of

Seva

006533

EIVED from

of Rupees

14 ஜூன் 1995

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

-----

பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் – எழுத்து வடிவங்கள் – அனைத்தும் நாட்டுடைமையாக்குதல் – பேரறிஞர் அண்ணாவின் துணைவியார் ராணி அண்ணாதுரைக்கு குடும்ப நலப் பாதுகாப்புக்காக பரிவுத்தொகை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - -

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டு (த.வ1-1) த்துறை

அரசாணை (நிலை) எண். 128

நாள்: 2.6.1995
திருவள்ளுவர் ஆண்டு 2026
யுவ – வைகாசி 19

படிக்க:-

பக்.5 — 1. அரசாணை (நிலை) எண்.190 தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறை நாள்: 15.9.1994

பக்.7 — 2. அரசாணை (நிலை) எண்.228 தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறை நாள்: 28.10.1994

பக்.11, 43. — 3. தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண். அ2/11819/94 நாள்: 14.2.94 மற்றும் 17.2.95.

....

ஆணை:-

-----

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழாவையொட்டி அண்ணாவின் அனைத்து படைப்புகள், எழுத்து வடிவங்கள் குறித்த பதிப்புரிமைகள் தனியாரிடம் மட்டும் அமைந்திருப்பதை இலக்கிய பொது நலன் கருதி நாட்டு மக்களுக்கு உரிமையாக்கும் நந்நோக்குடன் அண்ணாவின் இலக்கியப் படைப்புகள், எழுத்து வடிவங்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி, பார்வை 1-ல் கண்ட அரசாணையில் அரசு ஆணையிட்டுள்ளது. அண்ணாவின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டாலும், அதற்குரிய பரிவுத் தொகையை காலஞ்சென்ற அண்ணாவின் குடும்பத்திற்கு உரிய காலத்தில் வழங்க வேண்டி, அதனை ஆராயும் பொருட்டு தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில் வல்லுநர் குழுவை அமைத்து பார்வை 2-ல் கண்ட அரசாணையில் அரசு ஆணையிட்டுள்ளது.

2. வல்லுநர் குழுவின் பரிந்துரையின்பேரில் பேரறிஞர் அண்ணாவின் நூல்கள், எழுத்து வடிவங்கள் ஆகிய அனைத்து படைப்புகள் நாட்டுடைமையாக்கப்படுவதன் மூலம் பேரறிஞர் அண்ணாவின் துணைவியார் திருமதி. ராணி அண்ணாதுரை அவர்களுக்குப் பரிவுத் தொகையாக ரூ. 75 இலட்சம் (ரூபாய் எழுபத்தைந்து இலட்சம் மட்டும்) அவர்களின் குடும்ப நலப் பாதுகாப்புக்குப் பயன்படும் வகையில் அரசு ஒப்பளிப்பு செய்து இதன் மூலம் ஆணையிடுகிறது.

3. பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதன் மூலம், நாட்டுடைமையாக்கப்பட்ட நாள் முதல் அவர்தம் படைப்புகளின் பதிப்புரிமைகள் அனைத்தும் அரசையே சாரும். இதுகாறும் வெளிவராத பேரறிஞர் அண்ணாவின் நூல்களைப் புதிதாக வெளியிட முதல்நிலையில் அரசின் முன்இசைவைப் பதிப்பாளர்கள் பெற வேண்டும்.

/2/

4. இதற்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2202. பொதுக்கல்வி – 05. மொழிவளர்ச்சி – 800 ஏனைய செ
– எட்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் –
தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியன – 09. உத
மானியங்கள் – 3. ஏனைய வெகுமதிகள் (த.தொ.கு.2202 05
800 JE 0988)

5. பத்தி 2-இல் அனுமதிக்கப்பட்டுள்ள தொகையைப் பெற்று அதனை பேரறிஞர் அண்ணாவின் துணைவியார் திருமதி. இராணி அண்ணாத்துரைக்கு காசோலை மூலமாக வழங்குமாறு தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. பத்தி 2-இல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினம் புதிய பணிகள் குறித்த செலவினமாகும். சட்டப்பேரவையில் இதற்கான ஒப்புதல் விரைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதல் கிடைக்கும்வரை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெற்று இச்செலவு செய்யப்படும். இது குறித்த ஆணை, நிதி(வரவு-செலவு. I )துறையால் பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் அனுமதிக்கும்பொருட்டு அரசு ஆணையின் நகலை (இரண்டு) இணைத்து வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதி (வரவு-செலவு. I )துறைக்கு விண்ணப்பிக்குமாறு தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை, நிதித்துறை அலுவல் சார்பற்ற எண். 43335/கல்வி-I 95-1, நாள்: 25.5.1995இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா.பா. இளங்கோவன்,
அரசு செயலர்

பெறுநர்:
திருமதி. இராணி அண்ணாத்துரை, எண்.7, அவென்யூ சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை-108
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை-79
நகல்:-
நிதித்துறை, சென்னை-9 / செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை-9.
நிதி (வரவு-செலவு. I )துறை, சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு முதலமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், நிதியமைச்சர் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், வருவாய்த் அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு கல்வியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், கல்வியமைச்சர் அலுவலகம், சென்னை-9
நிதித்துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9
சட்டத்துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9
தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9
உதிரிகள்

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்